# தமிழ் இதழ்களில் கருத்துப் படங்களின் வளர்ச்சிப்போக்கு - ஓர் ஆய்வு

**முனைவர் சு.இரகுநாதன்**
உதவிப் பேராசிரியர்
காட்சித்தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

சமுதாயம் மேம்படவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சிரிக்கவைத்துச் சிந்திக்கத் தூண்டுவதாக இதழ்களில் கருத்துப்படங்கள் இடம்பெறுகின்றன. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் வெளியாகும் ‘ஆனந்தவிகடன்’, ‘குமுதம்’, ‘தினமணி’, ‘தினத்தந்தி’, ‘தினகரன்’, ‘தி இந்து தமிழ்’ ஆகிய இதழ்களின் கருத்துப்படங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தமிழ்ப்பத்திரிகை உலகிற்குக் கருத்துப்படங்களை வெளியிடும்முறையை அறிமுகப்படுத்தியவர் பாரதியார்தான். அவரால் தொடங்கப்பட்ட ‘இந்தியா’ இதழில் 1906 இல் செப்டம்பர் எட்டாம் நாளிலிருந்து ஒவ்வொரு வாரமும் கருத்துப்படம் வெளியாகியுள்ளது. இதில் வெளியிடப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பாரதியாரே விளக்கமளித்துள்ளார்.

### இந்தியாவில் இதழியல்

இந்தியப் பத்திரிக்கை வரலாறு என்பது இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் இருப்பதுபோல ஒருமொழி அல்லது பலமொழி இதழ்களின் வரலாறு ஆகும். “மதப்பிரச்சாரம் செய்வதற்காக இந்தியாவில் ஐரோப்பியர்கள் அச்சுக்கூடங்களை நிறுவினர். ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் மூலம் மதப்பிரச்சாரம் செய்தனர். 1780 ஆம் ஆண்டில் கிழக்கிந்திய கம்பெனியின் தொடப்பில்லாத தனிநபரான ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹக்கி எனும் ஆங்கிலேயர் இந்தியாவில் ஒர் இதழை அச்சிட்டு வெளியிட்டார். அவர் தொடங்கிய வாரப்பத்திரிக்கையின் பெயர் பெங்கால் கெஜட் என்பதாகும். இதனை ‘கல்கத்தா அட்வைசர்’ என்றும் அழைத்தனர். இதுவே இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் இதழாகும்.

### தமிழில் இதழியல் வளர்ச்சி

இந்தியாவின் இதழியல் வளர்ச்சியைச் சார்ந்தே தமிழகத்திலும் இதழ்கள் வளரத் தொடங்கின. “1578 ல் கொல்லத்தில் ‘தம்பிரான் வணக்கம்’ எனும் 16 பக்கமுடைய கிறித்துவ சமய வினாவிடை எனும் நூல் அச்சானது. இதுவே தமிழில் வெளியான முதல் அச்சு நூலாகும் என்கிறார் மா.சு.சம்பந்தன் இதன் பின்னர் கிறுத்துவப் பாதிரியார்கள் மதப் பிரச்சாரத்திற்காக துண்டுப் பிரசுரங்கள் பலவற்றையும் வெளியிட்டனர். “முதல் தமிழ் பத்திரிக்கை தமிழகத்தில் தொடங்கப்படவில்லை. அந்தப் பெருமையை இலங்கை அடைந்தது. 1802 ஆம் ஆண்டில் சிலோன் கெஜட் எனும் பத்திரிக்கை ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளில் வெளிவந்தது என்கிறார் மா.ரா. இளங்கோவன்.

**தமிழகத்தில் கருத்துப்பட இதழ்கள்**

பாரதியாரால் தொடங்கப்பட்ட ‘இந்தியா’. பாரதியார் ஆசிரியராக இருந்த மற்றொரு இதழாகிய ‘விஜயா’விலும் சிலக்குறிப்பிடத்தகுந்த கருத்துப்படங்கள் வெளிவந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இவரைத் தொடர்ந்து ‘தேச பக்தன்’ இதழில் கருத்துப்படங்களை வ.வே.சு.ஐயர் வெளியிட்டார். அதன்பின்னர் கோ.ஆர்.சர்மா சகோதரர்கள் டி.என்.நடராசப்பிள்ளை அவர்களை ஆசிரியராகக்கொண்டு நடத்திய ‘வினோதினி’ என்ற இதழிதும் கருத்துப்படங்கள் வெளிவந்திருந்தன.

1920களின் இறுதியில்தான் எஸ்.எஸ். வாசனால் நடத்தப்பெற்ற ‘ஆனந்த விகடன்’ இதழ் மூலமாகத் தமிழ் இதழில் உலகில் கருத்துப்படங்கள் புத்தொளியைப்பெற்றன. சுதந்திரச் சங்கு டி. எஸ். சொக்கலிங்கத்தை ஆசிரியராகக் கொண்டிருந்த ‘காந்தி’ வரதராஜுலு நாயுடு நடத்திய ‘தமிழ்நாடு’ ஆகிய பத்திரிகைகளிலும் அதிகஅளவில் கேலிச்சித்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தினமணி, தினகரன், தினத்தந்தி ஆகிய நாளிதழ்களிலும் குமுதம், ஆனந்தவிகடன், ஜுனியர்விகடன் ஆகிய வாரஇதழ்களிலும் தற்போது கருத்துப்படங்கள் மிகுதியாக இடம்பெறுவதைக் காணலாம்.

**ஆய்வு நோக்கம்**

ஓராயிரம் வார்த்தைகள் கூறும் செய்தியை ஒருசில கோடுகளில் கருத்துப்படங்கள் செய்தியை வெளிப்படுத்தி விடுகின்றன. கருத்துப்படங்களின் சிறப்பு அம்சத்தை உணர்ந்த இதழியல் அறிஞர்கள் மற்றும் ‘கார்டூனிஸ்ட்’ ஓவியர்கள் கருத்துப்படத்தைப் ‘படத்தலையங்கள்’ எனக் குறிப்பிடிருப்பதன் மூலம் தமிழ்பத்திரிக்கை மற்றும் தமிழ் இதழ்களில் இடம்பெறும் கருத்துப்படங்கள் முக்கியத்துவம் வாய்ந்வையாகும்.

**தமிழ் நாளிதழ்கள் - வார இதழ்கள் வகைதொகை:**

ஒரு பொருள் பற்றிய விவரங்களையும் அதன் வகைகளையும் எண்ணிக்கைகளையும் வரிசைப்படுத்திக் கூறுவது வகைதொகையாகும்.

அரசியல் தொடர்பான கருத்துப்படங்கள்.

- உலக அரசியல் தொடர்பான கருத்துப்படங்கள்.
- மத்திய அரசியல் தொடர்பான கருத்துப்படங்கள்.
- மாநில அரசியல தொடர்பான கருத்துப்படங்கள்.

என வகுத்துக் கூறலாம்.

**தமிழ் நாளிதழ்கள் - கருத்துப்படங்களின் சிறப்புகளும் உத்திகளும்**

கருத்துப்படங்களின் வெளியீட்டில் இன்றைய தமிழ் இதழ்கள் பல சிறப்பான உத்திகளைக் கையாண்டு வருகின்றன அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

படக் குறிப்பு
பேச்சு நிலை
தொடர் நிலை
செய்தி தருதல்
சிந்திக்க வைத்தல்
படக் குறிப்பு

ஒரு குறிப்பிட்ட செய்தியை விளக்குவதற்குக் கருத்துப்படத்தில் இடம்பெறும் படத்திற்கு மட்டும் குறிப்புத்தந்து செய்தியை விளக்கும்முறை ‘படக் குறிப்பு’ முறையாகும்.

**பேச்சு நிலை**

படத்தில் இடம்பெறும் தனிமனிதர்களோ குழுவோ அல்லது ஏதேனும் உருவங்களோ பேசுகின்ற நிலையில் கருத்தை விளக்கும் முறைக்குப் ‘பேச்சு நிலை’ முறையாகும்.

**தொடர் நிலை**

ஒரு நிகழ்ச்சியின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்று நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கருத்துக்களை வெளியிடும்முறை இம்முறையாகும்.

**செய்திதருதல்**

பரபரப்பான நிகழ்ச்சி ஏதேனும் ஒன்றைச் செய்தியாக வெளியிட்டு அச்செய்தி பற்றிய விளைவுகளையும் தீர்வுகளையும் கூறுவது இம்முறையாகும்.

**சிந்திக்கவைத்தல்**

கருத்துப்படத்தில் நகைச்சுவையாகவும் செய்தியை ஒப்பிட்டும் சிந்திக்க வைப்பது இம்முறையில் கையாளப்படுகின்றது.

**தமிழ் வார இதழ்கள் - கருத்துப்படங்களின் வகைகள்**

நடப்பு நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒரு மையக்கருத்தை மக்களுக்கு எடுத்துக்கூறுவதாகவும் படத்தைப் பார்ப்பவர்களிடையே ஒரு கருத்தை உருவாக்குவதாகவும் குறைவான சொற்கள்மூலம் அல்லது சொற்கள் இல்லாமலே கருத்தைப் புலப்படுத்துவது கருத்துப்படமாகும். இக்கருத்துப்படங்களை அது உணர்த்தும் கருத்துக்கள் வடிவம் இவற்றிற்கு ஏற்ப இதைப் பகுத்துக்காட்டலாம். அவை:

- தலையங்கக் கருத்துப்படம்
- அரசியல் கருத்துப்படம்
- கட்டத்திற்குள் கருத்துப்படம்
- அட்டை பட கருத்துப்படம்
- சமூக – சிறப்பு கருத்துப்படம்

2016-2017ஆம் ஆண்டில் ஜல்லிகட்டு, மல்லுகட்டு என்று தமிழக அரசியல் கட்சித்தலைவர்கள் அனைவரும் மல்லுகட்டுவதுபோல் கருத்துப்படமும் அம்பானியின் தொலைபேசி நிறுவனம் ‘ஜியோ’ பல்வேறு சலுகைகளை அறிவித்தும் அதற்கு மோடியின் ‘டிஜிடல்’ இந்தியாவைப் பற்றிய செய்திகளைக் கருத்துப்படங்கள் மூலம் ஆனந்தவிகடன் வெளியிட்டு பல்வேறு கோணங்களில் ஆராய செய்யும் இச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது. தலைப்புச் செய்திகளை முன்நிறுத்திக் கருத்துப்படங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

சென்னையில் பெய்தமழையினால் ஏற்பட்ட ‘வெள்ளம்’ குறித்த கருத்துப்படமும் மேலும் பல நிறுவனங்களின் அறக்கட்டளை செய்திருக்கும் மற்றும் அரசு செய்திருக்கும் நிவாரணங்களையும் வெளியிட்ட விதங்கள் கருத்துப்படங்கள்மூலம் பெறப்பட்டுள்ளன.

‘கிங்பிஸ்ஸர்’ நிறுவனத்தின் உரிமையாளர் பல்வேறு வங்கிகளில் கடன்களைப் பெற்றுக்கொண்டு, வெளிநாட்டிற்குச் சென்று தஞ்சம் அடைந்துள்ளது போன்ற கருத்துப்படங்கள் 2016-2017 ஆம் ஆண்டில் முக்கிய செய்தியாகவும் இதனை வெளியிட்டிருக்கின்றன.

**முடிவுரை**

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட 2016 முதல் 2017 வரை உள்ள ஆண்டுகளில் இதழ்க் கருத்துப்படங்களில் அரசியல் தொடர்பான கருத்துப்படங்கள் மிகுதியாகவும் சமூகம் மற்றும் பொருளாராரக் கருத்துப்படங்கள் குறைவாகவும் இடம் பெற்றுள்ளன. மேலும் அட்டைபடங்களும் 2017ஆம் ஆண்டில் அதிக அளவில் வெளியிடப்பட்டுள்ளன. உலக அரசியல், மத்திய அரசியல், தமிழக அரசியல் மற்றும் மக்களின் அன்றாடம் தீர்க்க வேண்டிய சமூகச் சிக்கல்கள் போன்றவை அதிகமாக வெளியிடப்பட்டுள்ளன.

தினமணி, தினகரன், தினத்தந்தி ஆகிய நாளிதழ்களிலும் குமுதம் ஆகிய வார இதழ்களிலும் வெளிவந்துள்ள கருத்துப்படங்களின் தலைப்புக்கள் தமிழில் தரப்பட்டுள்ளன. இக்கருத்துப்படங்களுக்குத் தலைப்பிடும் உத்தியை இவ்விதழ்கள் கையாண்டு வருகின்றன இவை கருத்துப்படங்களில் சில கதைகளை எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் வெளிவருகின்றன.

கருத்துப்படமும், கேலிச்சித்திரமும் ஒன்றாகவே தோன்றுகின்றன. ஆனால் இரண்டிற்கும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. கருத்துப்படத்தில் கருத்துக்குத்தான் முதலிடம் தரப்படுகின்றது. ஆனால் கேலிச்சித்திரத்தில் நபர்களுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகின்றது.

தமிழகம் தொடர்பான கருத்துப்படங்களில் தேர்தல் தொடர்பான கருத்துப்படங்கள் முக்கியமாய் இடம்பெற்றுள்ளன. ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு மற்றும் டாஸ்மார்க் முற்றுகை போராட்டம் மற்றும் எதிர்ப்புப் போராட்டங்கள், சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிமன்றங்களின் உத்தரவுகள் மேலும் பன்னீர்செல்வம், சசிகலா போன்றோரின் செயல்பாடுகள் குறித்தும் கருத்துப்படங்களை வெளியிட்டுச் சமூகத்தில் செய்தியைக்கொண்டு சேர்த்துள்ளன.

**துணை நின்ற நூல்கள்**

1. ஆனந்தவிகடன் தீபாவளிமலர், சென்னை.
2. இளங்கோவன்.மா.ரா., இதழியல் நோக்கு, சேகர்பதிப்பகம், சென்னை, 1981.
3. இளங்கோவன்.மா.ரா., முதல் நாளிதழ்கள் மூன்று, சேகர்பதிப்பகம், சென்னை, 1982 (முதற்பதிப்பு).
4. குருசாமி.மா.பா.,இதழியல் கலை, வண்ணன் வெளியீடு திருச்செந்தூர் 1988 (இரண்டாம் பதிப்பு).
5. சாந்தா.அ. & மோகன்.வீ., மக்கள் ஊடகத் தொடர்பியல் அடிப்படைகள், மீடியா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 2001.
6. தினத்தந்திவெள்ளிவிழாமலர். சென்னை.